**வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்டொக் என்ட் எங்ரோ என்டர்பிரைசஸ் (பிரைவட்) லிமிடெட் - 2025**

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **மறுப்பு அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்டொக் என்ட் எங்ரோ என்டர்பிரைசஸ் (பிரைவட்) லிமிடெட்டின் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்டொக் என்ட் எங்ரோ என்டர்பிரைசஸ் (பிரைவட்) லிமிடெட்டின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

1.2 **அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில விபரிக்கப்பட்டுள்ள பிரகாரம், நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருண்மையான உறுப்படிகள் மாற்று வழிகளினூடாக உறுதிப்படுத்தப்படுவதற்கு அல்லது சரிப்பார்ப்பதற்கு என்னால் முடியவில்லை.

இக் காரணத்தினால், அறிக்கைப்படுத்தப்பட்ட அல்லது அறிக்கைப்படுத்தப்படாத காசு மற்றும் நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று தொடர்பாக ஏதேனும் சீராக்கல் மேற்கொள்வதற்கு அவசியமானதா என்று உறுதிசெய்ய முடியாதுள்ளது.

1.3 **நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் கம்பனியின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

1.5 **நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்களாகப் வருவாய் ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 241,410 கழிக்கப்பட்டு, ரூபா 1.68 மில்லியன் கூட்டப்பட்டிருந்தபோதிலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் நியமம் இலக்கம் 10.21 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் தவறுகள் ஒப்பீட்டு ரீதியில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படவில்லை என்பதுடன், மேற்படி நியமத்தின் 10.23 ஆம் பந்தியின் பிரகாரம் அதனுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் திருத்தம் செய்வதற்குப் குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது. | கணக்கீட்டுத் நியமங்களுக்கமைய முன்னைய ஆண்டுகளின் தவறுகளை ஒப்பீட்டு ரீதியில் சீராக்கம் செய்து நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கும், அத்தகைய சீராக்கல்களை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் நியமங்களின் 17.4 ஆம் பந்தியின் பிரகாரம் கிராந்துருகோட்டே பண்ணையின் 1054 ஏக்கர் நிலத்தின் பெறுமதியும், தம்மின்ன பண்ணையின் 100 ஏக்கர் நிலத்தின் பெறுமதியும் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கிராந்துருகோட்டே பண்ணையின் 1054 ஏக்கர் நிலப்பரப்பு மற்றும் தம்மின்ன பண்ணையின் 100 ஏக்கர் நிலப்பரப்பு கம்பனியின் பயன்பாட்டிற்காக மாத்திரமே வழங்கப்பட்டுள்ளதுடன் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்படவில்லை. | கணக்கீட்டுத் நியமங்களுக்கு அமைய நிலங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் நியமங்களின் 23.10 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு அலகு வருமானத்தை இனங்காணும் போது கொள்வனவு | எதிர்காலத்தில் இது சரியாகச் செய்யப்படும். | கணக்கீட்டுத் நியமங்களுக்கு அமைய கொள்வனவு செய்பவருக்கு பொருட்களுடன் |

| | | | |
|---|---|---|---|
| | செய்பவருக்கு பொருட்களுடன் தொடர்புடைய இடர் மற்றும் பலன்கள் மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், 2025 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் ரூபா 2.44 மில்லியன் வருமானமாகக் காட்டப்பட்டிருந்த 40 தேக்கு மரங்களை அகற்றுவதற்குத் தேவையான அனுமதி கணக்காய்வு திகதியான 2026 மார்ச் 09 ஆம் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. இக்காரணத்தினால் வருமானம் ரூபா 2.44 மில்லியனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | | தொடர்புடைய இடர் மற்றும் பலன்கள் மாற்றப்பட்டதன் பின்னர் மாத்திரமே விற்பனை வருமானமாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் நியமங்களின் 28.18 ஆம் பந்தியின் பிரகாரம் பணிக்கொடை கணக்கீட்டின் போது காப்பீட்டு மதிப்பீடு முறையை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டு அதற்குரிய சரிசெய்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றபோதிலும், கம்பனி அதற்கு இணங்கிச் செயற்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் ஊழியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகக் காணப்படுவதனால் பணிக்கொடை கணக்கீட்டின் போது காப்பீட்டு மதிப்பீடு முறையைப் பின்பற்றுவதற்கான நிபுணத்துவ உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு பெருமளவு செலவை தாங்கிக் கொள்ளும் திறன் இல்லை என்பதால் எதிர்காலத்தில் இம்முறையைப் பின்பற்றுவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டுத் நியமங்களுக்கு அமைய காப்பீட்டு மதிப்பீடு முறையை அடிப்படையாகக் கொண்டு பணிக்கொடை பொறுப்புக்கள் கணக்கிடப்பட்டு கணக்கில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது பணிக்கொடை கொடுப்பனவுகள் ரூபா 322,420 ஐயும், தேக்கு மரங்களின் மதிப்பீடு மற்றும் தேக்கு மரங்கள் விற்பனையின் மூலம் ஈட்டப்பட்ட மொத்த இலாபமான ரூபா 10 மில்லியனையும் பணமில்லா கொடுக்கல் வாங்கலாக இலாபத்துடன் சரிசெய்வதும் மற்றும் தேக்கு மரங்கள் விற்பனையின் மூலம் பெறப்பட்ட ரூபா 3.15 மில்லியனை முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான காசுப் பாய்ச்சலாக காட்டுவதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இருப்புகளின் மாற்றம் ரூபா 1.24 மில்லியனை தொழிற்படு | விடயங்களைச் சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தொழிற்படு மூலதன மாற்றங்கள் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளைச் சரியாக இனங்கண்டு காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன மாற்றங்களின் கீழ் சரிசெய்யாதிருந்ததுடன், வியாபார மற்றும் செலுத்தப்பட வேண்டிய மீதிகளின் மாற்றத்தினால் ஏற்பட்ட ரூபா 6.55 மில்லியன் காசுப் பாய்ச்சலானது, காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 5.61 மில்லியன் காசுப் பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கம்பனியின் வசம் காணப்பட்ட தம்புத்தேகமவிலுள்ள நிராவிய பண்ணை, கந்தளாய் பண்ணை, பொலன்னறுவையிலுள்ள சித்தபுர பண்ணை மற்றும் வெலிகந்தையிலுள்ள முத்துவெல்ல பண்ணை ஆகியன 2005-2010 ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் முறையான எழுத்துப்பூர்வ ஆவணப் பரிமாற்றங்கள் இன்றி மகாவலி அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இப்பண்ணைகளுக்குச் சொந்தமான ரூபா 22.34 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் கம்பனியினால் பயன்படுத்தப்படாத போதிலும், அவை கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அச்சொத்துக்கள் இலங்கை மகாவலி அதிகாரசபையினாலோ அல்லது கம்பனியினாலோ பௌதீக ரீதியாகக் கணக்கெடுப்புச் செய்யப்படவில்லை. இதன் காரணமாக, அச்சொத்துக்களின் இருப்புத் தன்மையை கணக்காய்வினால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் போயுள்ளது. | இது தொடர்பாக இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் கலந்துரையாடி 2026 ஆம் ஆண்டில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மகாவலி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்ட பண்ணைகளுக்கான எழுத்துப்பூர்வ ஆவணங்கள் பரிமாற்றப்பட வேண்டும் என்பதுடன், அதற்கமைய நிதிக்கூற்றுக்களில் சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், இச்சொத்துக்களை பௌதீக ரீதியாகக் கணக்கெடுப்புச் செய்து அவற்றின் இருப்புத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (இ) | உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் காரணமாக குறிப்பிட்ட வருடத்தின் வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் சரியாக இனங்காணப்படாமை அதற்குரிய சரிசெய்தல்களை முன்னைய வருடங்களின் நிதிப் பெறுபேறுகளுடன் சரிசெய்யும் நடவடிக்கையை கம்பனி தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்ததன் விளைவாக, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த நிதிப் பெறுபேறுகளான முறையே ரூபா | எதிர்காலத்தில் குறிப்பிட்ட வருடத்தின் செலவீனங்களை அவ் வருடத்திலேயே சரிசெய்வதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | வருடத்திற்குரிய வருமானங்கள் மற்றும் செலவீனங்களைச் சரியாக இனங்காண்பதற்குப் பொறுப்புக் கூறத்தக்க கட்டுப்பாட்டு அமைப்பொன்று நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 167,815 இலாபம், ரூபா 295,352 நட்டம் மற்றும் ரூபா 9.77 மில்லியன் இலாபமானது, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 627,268 இலாபமாகவும், ரூபா 6.34 மில்லியன் நட்டமாகவும் மற்றும் ரூபா 11.21 மில்லியன் லாபமாகவும் 15 சதவீதத்திலிருந்து 2048 சதவீதம் வரையான வீதத்தினால் மாற்றமடைந்திருந்தது. | | |
| (ஈ) | 05 வருடங்களுக்கும் மேற்பட்ட ரூபா 13.32 மில்லியன் பெறுமதியான அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவது நிச்சயமற்றதாகக் காணப்பட்ட போதிலும் அதற்கான எவ்வித மதிப்பீட்டு இழப்பு ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டு முதல் ஐயக்கடன் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. 05 வருடங்களுக்கும் மேற்பட்ட செலுத்தப்பட வேண்டிய மீதியை 2026 ஆம் ஆண்டில் தவணை முறையில் செலுத்துவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | அறவிடுவது நிச்சயமற்ற மீதிகளுக்காகப் போதுமான மதிப்பீட்டு இழப்பு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு ரூபா 2.29 மில்லியன் பெறுமதியான வாகனங்கள், நடைமுறையல்லா சொத்து மீதிகளிலிருந்தும் நிலையான சொத்துப் பதிவேட்டிலிருந்தும் நீக்கப்பட்டு, அகற்றல் கணக்கில் காட்டப்பட்டிருந்தன. | 2026 ஆம் ஆண்டில் அகற்றுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | அகற்றுவதற்காக இனங்காணப்பட்ட சொத்துக்கள் அவை அகற்றப்படும் வரை நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | திட்டக் குழுவினால் தெரிவு செய்யப்பட்ட வெளியக முதலீட்டாளர் ஒருவருடன் அரச தனியார் பங்களிப்பு கூட்டு முயற்சியாக கம்பனியை மறுசீரமைப்பதற்கென 2018 அக்டோபர் 03 ஆம் திகதியன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2022 சனவரி 25 ஆம் திகதியன்றும் அரச தனியார் நிர்வாகக் கூட்டாண்மை ஒப்பந்தத்தின் கீழ் கம்பனியை மறுசீரமைப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2026 மார்ச் 09 ஆம் திகதி வரை அத்தகைய மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் கம்பனியின் நடப்பு விகிதங்கள் முறையே 0.32:1, 0.33:1 மற்றும் 0.4:1 ஆக மாத்திரமே காணப்பட்டமையால், நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்புத்தன்மை குறித்து கணிசமான நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.<br>எவ்வாறாயினும், அது தொடர்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் நியமங்களின் இலக்கம் 3.9 இன் பிரகாரம் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மகாவலி அதிகாரசபையினால் இக்கடமை நிறைவேற்றப்படும். | வழங்கப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், கம்பனியின் நடப்பு விகிதத்தை 2:1 ஆகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | கிடைக்கப்பெற்ற விடயம் | தொகை<br><br>ரூபா மில்லியன் | இல்லாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பொது ஒதுக்கம் | | | | |
| (i) | மகாவலி பொருளாதார முகவராண்மை | 388.58 | பெறுமதியை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் | வெளியிடப்பட்ட இந்த மூலதனம் மற்றும் இருப்பு எனக் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் இல்லை. இது தொடர்பாக இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | கொத்மலை பால் அபிவிருத்தி நிதியம் | 2.9 | -மேற்படி- | | |
| (iii) | ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் மூலதன மானியங்கள் | 3.58 | மூலதன மானியங்களாகக் கணக்கில் காட்டுவதற்குரிய ஆவணங்கள் | | |
| (iv) | வெளிநாட்டு உதவி | 5.73 | -மேற்படி- | | |
| (ஆ) | மூலதன இருப்புக்கள் | 14.16 | -மேற்படி- | | |

### 1.6 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி 2018 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுக் கட்டணங்களைச் செலுத்தியிருக்கவில்லை என்பதுடன், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 1.28 மில்லியன் செலுத்தப்பட வேண்டியிருந்தது. மேலும், 05 வருடங்களுக்கும் மேற்பட்ட செலுத்தப்பட வேண்டிய மீதிப் பெறுமதி ரூபா 26.05 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவையிலுள்ள கணக்காய்வுக் கட்டணங்களை விரைவாகச் செலுத்தி முடிப்பதற்கும், ஐந்து வருடங்களுக்கும் மேற்பட்ட செலுத்தப்பட வேண்டிய மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நீண்டகாலமாகச் செலுத்தப்பட வேண்டிய சம்பளமாக ரூபா 3.08 மில்லியன் சம்பள உயர்வும், அதற்குரிய ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 1.15 மில்லியன் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 166,208 ஆகியன நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்தப்பட வேண்டிய சம்பளங்கள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 10 (2) ஆம் பிரிவு. | 2013 சனவரி முதல் 2025 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குள் 101 மாதங்களுக்குரிய ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 18.95 மில்லியன் பங்களிப்புத் தொகையும் ரூபா 12.25 மில்லியன் மேலதிகக் கட்டணமும் கணக்காய்வு திகதியான 2026 மார்ச் 18 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவையிலுள்ள பங்களிப்புத் தொகைகளை விரைவாகச் செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் 5 (1) ஆம் பிரிவு. | 2020 பெப்ரவரி மாதத்தில் சேவையிலிருந்து விலகிய மூன்று ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1.32 மில்லியன் பணிக்கொடைத் தொகை 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகையை 2026 ஆம் ஆண்டில் செலுத்தி முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் தொகைகளை விரைவாகச் செலுத்தி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் II ஆம் தொகுதியின் 102 ஆம் பிரிவு. | கம்பனி வருமான வரிக்காகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமான வரிக்காகப் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | வருமான வரிக்காகப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதியிட்ட PED 01/2021 ஆம் இலக்க அரச முயற்சிகளுக்கான சுற்றறிக்கை | | | |
| | (i) செயல்பாட்டுக் கையேட்டின் 3.2 ஆம் பந்தி | அனைத்து அரச முயற்சிகளினதும் பணியாளர்களுக்கான ஆட்சேர்ப்புப் நடைமுறை மற்றும் கொடுப்பனவுக் கட்டமைப்பு ஆகியவற்றுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று உரிய அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட வேண்டும் என்றபோதிலும் நிறுவனம் அதற்கு இணங்கச் செயற்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் சமர்ப்பிப்பதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் கொடுப்பனவுக் கட்டமைப்பிற்கான சுற்றறிக்கை விதிகளுக்கு அமைய தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) அரச முயற்சியாண்மையின் கூட்டு நிறுவன ஆளுகைக்கான வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தி | செயல்பாட்டுத் திட்டத்திற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் தந்திரோபாய திட்டம், செயல்பாட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் ஆகியவற்றை உரிய அமைச்சின் செயலாளரின் ஊடாக அரச முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்றபோதிலும், கம்பனி அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | செயல்பாட்டுத் திட்டத்திற்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், தந்திரோபாய திட்டம், செயல்பாட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் ஆகியவற்றை அரச முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். |
| (உ) | 2013 செப்டம்பர் 11 ஆம் திகதியிட்ட 02/2013 ஆம் | ரூபா 13.89 மில்லியன் பெறுமதியான செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைத் | பணிக்கொடைத் தொகையைத் தனிவொரு கணக்கில் | சுற்றறிக்கைக்கு அமைய பணிக்கொடை |

| | | | |
|---|---|---|---|
| இலக்க அரச முயற்சிகளுக்கான சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி | தொகை இனங்காணப்பட்டிருந்த போதிலும், அத்தொகையைத் தனிவொரு கணக்கில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்பிலிடுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து 2026 ஆம் ஆண்டில் செயற்படுவதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | ஒதுக்கீடுகளைத் தனிவொரு கணக்கில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வு ஆண்டில் செயல்பாட்டுப் பெறுபேறு ரூபா 850,395 நட்டமாகக் காணப்பட்டதுடன், அதற்கு எதிர்மாறாக முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 9.77 மில்லியனாகக் காணப்பட்டது. அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 10.62 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. உயிரியல் சொத்துக்களின் நியாயமான பெறுமதி வீழ்ச்சியடைந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணியாக அமைந்திருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனமானது 10 ரூபாய் பெறுமதியான 5,000,000 பங்குகளைக் கொண்டிருந்த போதிலும், ஆரம்பப் பணிப்பாளர்களுக்கு 03 பங்குகள் மாத்திரமே வழங்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் பெயருக்கு அப்பங்குகள் மாற்றப்பட்டிருந்தன. கம்பனியின் பணிப்பாளர் சபை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அவ்வப்போது அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும், 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் கம்பனிக்கு ஒரு தவிசாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் ஏனைய பங்குகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இலங்கை மகாவலி அதிகாரசபையுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | தவிசாளர் உட்பட பணிப்பாளர் சபையை முறையான வகையில் நியமிப்பதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், எஞ்சிய பங்குகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துச் சரிபார்ப்பின் போது பயன்படுத்த முடியாதவை என இனங்காணப்பட்டிருந்த ரூபா 9.9 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களை அகற்றுவதற்கு 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கம்பனியினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான ரூபா 8.16 மில்லியன் பெறுமதியுடைய 04 வாகனங்களை கம்பனியின் பெயருக்குப் பொறுப்பேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் இதனைச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பயன்படுத்தப்படாத சொத்துக்களை அகற்றுவதற்கும், கம்பனி பயன்படுத்தும் மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்களைப் பொறுப்பேற்பதற்கும் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பால் உற்பத்தியின் போது ஒரு பக்கவிளை பொருளாகப் பெறப்படும் கொழுப்பு, ஐஸ்கிரீம் மற்றும் நெய் உற்பத்தியின் பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ஐஸ்கிரீம் மற்றும் நெய் உற்பத்திச் செலவைக் கணக்கிடும் போது பயன்படுத்தப்படும் அக்கொழுப்பின் பெறுமதியைக் கணிப்பிடுவதற்கான அலகு விலை ரூபா 400 ஆகக் காணப்பட்ட நிலையான விலையிலிருந்து 2024 பெப்ரவரி முதல் ரூபா 1,000 ஆக அதிகரிக்கப்பட்டிருந்தது. இதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணிகள், அதற்கான அங்கீகாரம் மற்றும் இவ்விலையதிகரிப்பினால் ஏற்பட்ட தாக்கம் ஆகியன கணக்காய்வின் போது கண்டறியப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டின் இறுதிச் கணக்குகளில் இச்சரிசெய்தல்கள் தொடர்பான வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கொழுப்பின் பெறுமதியைக் கணிப்பிடுவது தொடர்பான விபரங்கள் முறையான வகையில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

3.2 **செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்தம் சுமார் 3000 லீற்றர் ஐஸ்கிரீம் உற்பத்தி செய்யும் இயந்திரம் பழுதடைந்ததன் காரணமாக 2023 திசெம்பர் மாதம் முதல் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2026 மார்ச் 09 ஆம் திகதி வரையிலும் அவ்வியந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் புதிய ஐஸ்கிரீம் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | விரைவாக இவ்வியந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது அது அகற்றப்பட வேண்டுமாயின் முறையான வகையில் அகற்றிவிட்டு புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுத்து ஐஸ்கிரீம் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | 2025 ஆம் ஆண்டில் 14 எருமைகள் உயிரிழந்தமை அறிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக அப்பிரதேச கால்நடை மருத்துவ அதிகாரியின் பரிந்துரைகள் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப காணொளிகளுடனான அறிக்கை, சேத விபரங்கள் ஆய்வுக் குழுவினால் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டு முதல் அறிக்கை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உயிருள்ள விலங்குகள் உயிரிழப்பது தொடர்பாக அந்தந்த சந்தர்ப்பங்களில் பிரதேச கால்நடை மருத்துவருக்குத் தெரியப்படுத்தி அதற்குரிய அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.3 **சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராந்துருகோட்டே பண்ணையின் வரவுகளை வங்கியில் வைப்பிலிடுவதனை மேற்கொள்ளாமல் தினசரி ரூபா 100,000 இற்கும் அதிகமான தொகையைக் கையில் வைத்திருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. 2025 ஆம் ஆண்டின் செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் ரூபா 2 மில்லியனுக்கும் அதிகமான தொகை அவ்வாறு கையில் வைக்கப்பட்டிருந்தது. | 2026 ஆம் ஆண்டு முதல் வங்கியில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தினசரி வரவுகள் அன்றாடம் வங்கியில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் இவ்வகைப் பொறுப்பைத் தவறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும், மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் உத்தியோகத்தர்களின் பொறுப்பாக அமைதல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராந்துருகோட்டே பண்ணையை ஒரு கால்நடை வளர்ப்பு பயிற்சி நிலையமாக மாற்றும் நோக்கில், இலங்கை மகாவலி அதிகாரசபையின் "சீ" வலயத்தினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட மாட்டுத் தொழுவங்கள், ஆட்டுத் தொழுவங்கள் உள்ளிட்ட நிர்மாணங்கள் மற்றும் ரூபா 9.34 மில்லியன் பெறுமதியான பொருட்கள் ஆகியன 2016 பெப்ரவரி 08 ஆம் திகதி கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இந்நிர்மாணங்களைப் பயன்படுத்துவதற்கான ஒரு குறிப்பிட்ட திட்டமிடல் அல்லது நடைமுறையை ஏற்படுத்திக் கொள்ளாமை காரணமாக ஒப்படைக்கப்பட்ட திகதி முதல் அச்சொத்துக்கள் எவ்விதப் பயன்பாடுமின்றிப் பாவனையற்றுப் போயிருந்தன. கிராந்துருகோட்டே கால்நடைப் பண்ணைக்குச் சொந்தமானதும் 1986 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டதுமான 28 கட்டிடங்கள் முழுமையாக பாழடைந்த நிலையில் காணப்பட்டன. | பிறிதொரு தரப்பினரின் தேவைக்காக நிர்மாணிக்கப்பட்ட இந்த நிலையம் 2016 ஆம் ஆண்டில் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் இச்சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான மூலதனத் திறன் நிறுவனத்திடம் இல்லை. மேலும், 28 கட்டிடங்களை 2026 ஆம் ஆண்டில் கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இச்சொத்துக்களைப் செயற்திறனுள்ள முறையில் பயன்படுத்துவதற்குப் பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிராந்துருகோட்டே மற்றும் தம்மின்ன அலகுகளின் வசம் சுமார் 1154 ஏக்கர் நிலப்பரப்பு காணப்பட்ட போதிலும், அந்நிலப்பரப்பை கம்பனி பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகப் செயற்திறனுள்ள முறையில் பயன்படுத்தியிருக்கவில்லை. அதற்கமைய கம்பனியின் வசம் காணப்பட்ட நிலப்பரப்பிலிருந்து 269 ஏக்கர் அதாவது சுமார் 23 சதவீதம் மாத்திரமே 2025 ஆம் ஆண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | போகக் குத்தகை முறையின் கீழ் நிலத்தைக் கோரிய அனைத்து விவசாயிகளுக்கும் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. | கம்பனியின் வசம் உள்ள நிலப்பரப்பைச் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்காகப் செயற்திறனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கும், எஞ்சிய நிலப்பரப்பை வெளித்தரப்பினருக்குப் போகக் குத்தகை முறையின் கீழ் வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **குறிக்கோள் சார்ந்த செயற்பாடுகளின் முன்னேற்றம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் அமைப்பு அகவிதியில் பண்ணைகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொளல், மொத்தமாகவும் சில்லறையாகவும் கோழி வளர்ப்பை மேற்கொள்ளல், கோழி வளர்ப்பிற்குத் தேவையான தீவனங்களை விவசாயிகளுக்கு உற்பத்தி செய்தல், மாடுகள், பன்றிகள், கோழிகள் போன்ற விலங்குகளைப் பெருக்குதல், விற்பனை செய்தல், மேம்படுத்துதல், உருவாக்குதல், ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் பழங்கள், தானியங்கள் சார்ந்த வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய முதன்மை நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த பன்றி வளர்ப்பு, பிராய்லர் கோழி உற்பத்தி, ஆடு வளர்ப்பு ஆகிய செயல்பாடுகள் 2020 ஆம் ஆண்டு முதல் வருடத்திற்கு வருடம் நிறுத்தப்பட்டு 2025 ஆம் ஆண்டாகும்போது எருமை வளர்ப்பைத் தவிர ஏனைய அனைத்துப் பணிகளும் நிறுத்தப்பட்டிருந்தன.<br>மேலும், கம்பனியின் வசம் இருந்த எருமைகளில் 26 எருமைகள் 2025 ஆம் ஆண்டினுள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் வருட இறுதியில் கம்பனியின் உயிருள்ள விலங்குகளாக 118 எருமைகள் மாத்திரமே எஞ்சியிருந்தன. | எதிர்வரும் வருடங்களில் இச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கம்பனி நிறுவப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அல்லது கம்பனி தொடர்பாக வழங்கப்பட்டிருந்த அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அமைய, வெளியக முதலீட்டாளர் ஒருவருடன் அரச தனியார் நிர்வாகக் கூட்டாண்மை ஒப்பந்தத்தின் கீழ் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |